# DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 212/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW1 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | திரு. தமிழரசன் |
| Father's Name | -- | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the Day of 10.06.2019

முதல் விசாரணை

நான் தொண்டாமுத்தூரில் குடியிருந்து வருகிறேன். எலக்ட்ரிக்கல் கடையில் வேலை செய்கிறேன். விபத்தில் இறந்த பால் பாண்டி, ஜான் பாட்சா ஆகியோரை தெரியும். 24.7.16 அன்று நானும் எனது நண்பர்கள் பால்பாண்டி, ஜான் பாட்சா, தமிழரசு, சாகுல் அமீது, மணிகண்டன், ரமேஷ் ஆகியோருடன் ஆழியார் டேமிற்கு வருவதற்காக ஊரிலிருந்து 9 மணிக்கு கிளம்பினோம் நானும் மணிக்ண்டனும் ஒரு இரு சக்கர வாகனத்திலும் ரமேஷ் ,சாகும்அமீதும் ஒரு இரு சக்கர வாகனத்திலும் பால்பாண்டி, ஜான் பாட்சா ஒரு இரு சக்கர வாகனத்திலும் வந்தோம். சுமார் 11 மணியளவில் கந்தமகால் திருமண மண்டபத்தை தாண்டி வரும்போது எதிர் திசையில் வந்த மினிபஸ் பால்பாண்டி ஓட்டி வந்த வண்டியின் மீது அடித்ததில் சம்பவயிடத்திலேயே பால்பாண்டி இற்ந்துவிட்டார். ஜான் பாட்சாவிற்கு தலையில் கைகளில் அடிபட்டது. இருவரையும் பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து கொண்டு வந்தோம். ஜான் பாட்சாவும் இறந்துவிட்டார். வீட்டிற்கு தகவல் தெரிவித்துவிட்டு, அன்றைய தினமே மாலை மகாலிங்கபுரம் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு அதசாஆ.1 ஆகும். மினி பஸ் ஓட்டுநரை விபத்து நடந்த இடத்தில் நான் பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் வைத்துப் பார்த்தேன். விபத்திற்கு மினி பஸ் ஓட்டுநர் ஒவர் ஸ்பீடாக வந்ததுதான் காரணம். போலீசார் விசாரித்தனர்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**(Sd/. Thiru. K. Chelliah B.A.,B.L.,)**
Judicial Magistrate No.II,
Pollachi.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 212/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW2 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | திரு. மணிகண்டன் |
| Father's Name | -- | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the Day of 10.06.2019

முதல்விசாரணை

நான் தொண்டாமுத்தூரில் குடியிருந்து கூலிவேலைக்கு செல்கிறேன். 24.7.16 அன்று நானும் என் நண்பர்கள் பால்பாண்டி, ஜான் பாட்சா, தமிழரசு, ரமேஷ், சாகுல் அமீது ஆகியோருடன் ஆழியார் செல்வதற்காக நானும் தமிழரசும் ஒரு பைக்கிலும், ரமேஷ்ம் சாகும் அமீதும் ஒரு பைக்கிலும் பால்பாண்டியும் ஜான் பாட்சாவும் ஒரு பைக்கிலும் வந்தோம். சுமார் 11.30 மணியளிவில் கந்தமகால் திருமண மண்டபம் தாண்டி திருவிக நகர் செல்லும் கட் ரோட் அருகே நாங்கள் சென்று கொண்டிருந்தபோது எங்களுக்கு முன்னால் பால்பாண்டியும் ஜான் பாட்சாவும் வண்டியில் சென்று கொண்டிருந்தபோது எதிரில் வந்த மினி பஸ் வெள்ளைக் கோட்டிற்கு அருகே வந்து பால்பாண்டி ஓட்டி வந்த பைக்கை அடித்துவிட்டது நாங்கள் சென்று பார்த்தபோது பால்பாண்டியும் ஜான் பாட்சாவும் ரத்தக் காயத்துடன் இருந்தார்கள். ரமேஷும் சாகுல் அமீதும் எங்களுக்கு முன்னால் சென்றுவிட்டதால் அவர்களுக்கு தகவல் கொடுத்து 108 ஆம்புலன்ஸ் வரவழைத்து பொள்ளாச்சி அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். மருத்துவமனை போகும் வழியிலேயே பால் பாண்டி இறந்துவிட்டார். மருத்துவமனைக்கு கொண்டு சென்றதும் ஜான் பாட்சாவும் இறந்துவிட்டார். வீட்டிற்கு தகவல் சொல்லிவிட்டு தமிழரசு புகார் கொடுத்தார். மினி பஸ் டிரைவரை அப்போது நான் பார்க்கவில்லை. மினி பஸ் வெள்ளைக் கோட்டை தாண்டி வந்து ஓட்டி வந்தது தான் விபத்திற்கு காரணம். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு விசாரணை இல்லை

**(Sd/. Thiru. K. Chelliah B.A.,B.L.,)**
Judicial Magistrate No.II,
Pollachi.

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.II POLLACHI

| | | | |
|---|---|---|---|
| CALENDAR | Case No. | : | CC 212/2016 |
| MISCELLANEOUS | | | |
| Preliminary Register | Sessions | : | |
| | Prosecution | : | PW3 |
| Deposition of Witness for | Defence | : | |
| | Court | : | |

| | | |
|---|---|---|
| Name | -- | திரு. சாகுல் அமீது |
| Father's Name | -- | |
| Village | -- | |
| Taluk | -- | |
| Caste | -- | |
| Calling | -- | |
| Religion | -- | |
| Age | -- | |

Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the Day of 10.06.2019

முதல்விசாரணை

நான் தொண்டாமுத்தூரில் குடியிருந்து சென்ட்ரிங் வேலை செய்கிறேன். 24.7.16 அன்று நானும் என் நண்பர்கள் பால்பாண்டி, ஜான் பாட்சா, தமிழரசு, ரமேஷ், மணிகண்டன் ஆகியோருடன் ஆழியார் செல்வதற்காக மணிகண்டனும் தமிழரசும் ஒரு பைக்கிலும், நானும் ரமேஷ்ம் ஒரு பைக்கிலும் பால்பாண்டியும் ஜான் பாட்சாவும் ஒரு பைக்கிலும் வந்தோம். நாங்கள் இரவு 9 மணிக்கு கிளம்பினோம். சுமார் 11.20 மணிக்கு கந்தமகால் திருமண மண்டம் அருகில் வந்தபோது, நானும் ரமேஷம் முன்னால் வந்துவிட்டோம்., தமிழரசு எனக்கு போன் செய்து பால்பாண்ட, ஜான் பாட்சா சென்று கொண்டிருந்த வண்டியை மினி பஸ் வந்து அடித்துவிட்டதாகவும் GH கொண்டு சென்றதாக தகவல் சொன்னார். நான் மருத்துவமனை சென்று பார்த்தபோது பால்பாண்டி ஏற்கனவே இறந்துவிட்டார். ஜான் பாட்சாவும் பின்னர் இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை இல்லை.

**(Sd/. Thiru. K. Chelliah B.A.,B.L.,)**
Judicial Magistrate No.II,
Pollachi.